# மாநில சுயாட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும்!


தமிழ்நாடு சட்டமன்றத்தில் 18.02.2026 ஆம் தேதியன்று திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர் குரியன் ஜோசப், ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் அசோக் வர்தன் ஷெட்டி மற்றும் மேனாள் மாநில திட்டக் குழுவின் தலைவர் முனைவர் மு.நாகநாதன் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒன்றிய - மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் முதல் பகுதி அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து அரியதொரு வரலாற்று சிறப்புமிக்க உரையை சட்டமன்றத்தில் பதிவிட்டார்.

மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர், நீதியரசர் ராஜமன்னார் குழு சமர்பித்த அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்த போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது ஆற்றிய உரைக்கு இணையாக மீண்டும் மாநில சுயாட்சி கொள்கையை முதல்வர் சட்டமன்றத்தில் வலியுறுத்தி பேசியது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனென்றால், பேரறிஞர் அண்ணா ஜனநாயக காவலர் பண்டிதர் நேரு காலத்தில் 1962 - 63 ஆம் ஆண்டில் மாநிலங்களவையில் ஆற்றிய உரை, திருமதி இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் மாநில சுயாட்சியை வலியுறுத்தி முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய உரைகளுக்கும், தற்சமயம் தலைவர் ஸ்டாலின் ஆற்றிய உரையின் காலங்கள் வெவ்வேறானவை. பண்டிதர் நேரு காலத்தில் இந்திய துணை கண்டம் பிரிவினையை கண்ட காலம், இந்தியா சுதந்திரம் அடைந்து பிரிவினையின் தாக்கத்திலிருந்து மீண்டு, மொழி வாரி மாநிலங்கள் அமைக்கப்பட்ட காலம். காங்கிரஸ் கட்சி ஆட்சி ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்ததன் விளைவாக மாநில உரிமைகள் கோரிக்கைகளை நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு சுயாட்சி கோரிக்கைகள் ஊறு விளைவிக்கும் என்று கருதினர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முதல்வரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பதவியேற்ற பிறகு டெல்லி சென்று பிரதமர் இந்திரா அம்மையாரை சந்தித்து விட்டு 1969, மார்ச் 17 ஆம் நாள் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார், அப்போது அவர் கூறியது பின்வருமாறு;

"மாநிலங்களுக்கு உரிய அதிகாரங்கள் அறியப்பட வேண்டும், மாநிலங்களுக்கு சுயாட்சி கிடைக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய நிலைப்பாடு எங்களுடைய தலைவர் அண்ணாவின் கனவும் அதுவே என்று கூறினார், தொடர்ந்து அவர் பேசுகையில் மாநில சுயாட்சி கோரிக்கை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிமுக்கியமான கொள்கை என்று தெளிவாக விளக்கினார், அதுமட்டுமல்ல மாநில சுயாட்சி குறித்து அறிந்து விரிவான அறிக்கையை வழங்கக்கூடிய அளவில் ஒரு குழுவை அமைக்க இருக்கிறோம் என்றும் தெரிவித்தார்.

1969 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 19 ஆம் நாள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த பி.வி.ராஜமன்னார் அவர்களின் தலைமையில், சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் லட்சுமணசாமி முதலியார், நீதிபதி பி. சந்திரா ரெட்டி ஆகியோர் கொண்ட குழுவை அமைத்தார். அக்குழு



27.05.1971அன்று பல்வேறு தரப்பினரின் கருத்துகளை கேட்டு ஆராய்ந்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது.

ஏப்ரல் 16,1974இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு பின்வரும் தீர்மானத்தை சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்;

பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மாநில சுயாட்சி பற்றியும், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துகளை மத்திய அரசு ஏற்று மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது " என்ற தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார். இந்நிலையில் பிரதமர் இந்திரா நெருக்கடி நிலையை அமல்படுத்தி ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தார், அதில் மிக முக்கியமானது 42வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் ஆகும், அதன் அடிப்படையில் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை ஒத்திசைவு பட்டியலுக்கு மாற்றினார்.

பொதுமக்களின் போராட்டத்தின் விளைவாக நெருக்கடி நிலையை விலக்கி கொண்டு தேர்தலை சந்தித்தார், வெற்றியை இழந்தார், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனதா கட்சியினர் 44வது அரசமைப்புச் சட்ட திருத்தத்தை அமல்படுத்தினார்கள், இச்சட்டத் திருத்தத்தின் மூலம் 42 வது சட்டத் திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட பல திருத்தங்களை ரத்துச் செய்து நிறைவேற்றினார்கள், ஆனாலும் 42 வது சட்ட திருத்தம் மூலம் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து ஒத்திசைவுக்கு பட்டியலுக்கு மாற்றப்பட்டதை மட்டும் ரத்து செய்யவில்லை. ஜனதா அரசு கல்வியை மாற்றிய பிரிவை மட்டும் இரத்து செய்யாமல் விட்டது, இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் காங்கிரஸின் அதிகார குவிப்பிற்கு இதர தேசியக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்து வருகின்றன என்பது தான். இதன் விளைவாகத் தான் "நீட்" தேர்வு. கல்வியில் ஒன்றிய அரசு அளவற்ற ஆதிக்கத்தை பயன்படுத்தி மாநில அரசின் அதிகாரத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையை மாற்றத்தான் உண்மையான கூட்டாட்சிக்காக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடி வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இடைவிடாது ஒன்றிய - மாநில அரசு உறவுகளை மாற்றியமைக்க சட்டதிருத்ததை கொண்டுவர முயற்சி செய்கிறது, அதன் விளைவாக 1983 ஆம் ஆண்டில் நீதிபதி சர்காரியா அவர்களின் தலைமையில் "மத்திய - மாநில உறவுகள் ஆணைக்குழு அமைக்கப்பட்டது, 2000 ஆம் ஆண்டில் நீதியரசர் வெங்கடாசலையா ஆணையம், 2004 ஆம் ஆண்டில் நீதியரசர் பூஞ்சி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணையங்கள் வழங்கிய அறிக்கைகளை ஆராயந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மேலும் மாநில உரிமைகள் பறிப்பும், ஒன்றியத்தில் அதிகாரக் குவிப்பும் தொடர்கதையாகி உள்ளது.

2014ல் ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பா.ஜ.க. ஆட்சி, மாநிலங்களின் உரிமைகளை மேலும் பறித்து வருகின்றனர், இந்தியாவில் ஏற்கனவே நிலவும் அரைகுறைக் கூட்டாட்சியும் அழிக்கப்பட்டு, ஒற்றையாட்சியை நோக்கி இந்த நாடு நகர்த்தப்படுகிறது என்ற அச்சம் நிலவுகிறது.

**சி.சேரன்**
சென்னை மேற்கு மாவட்ட
தலைமைச் செயற்குழு உறுப்பினர்.
செயலர்
இனமானப் பேராசிரியர் நற்றமிழ்த்
தொண்டகம்



இந்நிலையில் தான் ஒன்றிய - மாநில உறவுகளை ஆராய உச்சநீதிமன்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழு தனது முதல் பாக அறிக்கையை தமிழ்நாடு அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இக்குழுவின் அறிக்கையை சட்டமன்றத்தில் சமர்பித்து உரையாற்றிய முதல்வர் கூட்டாட்சி தத்துவத்தை நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவரது உரையின் முக்கியப் பகுதியை மீள் பதிவிடுகிறேன்;

"ஒரு மாநிலமாக, நம் மக்கள் காணும் கனவுகளை முழுமையாக நிறைவேற்றும் அளவிற்கு நம்மிடம் அதிகாரங்கள் இல்லை. ஏனென்றால் மாநில உரிமைகளை வழங்கும் ஓர் ஒன்றிய அரசு அமையவில்லை. இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டுதான் சமூக ரீதியில், கல்வியில், சுகாதாரத்தில், பொருளாதாரத்தில், உள்கட்டமைப்பு வசதிகளில் முன்னேறி வருகிறோம். நிதி உரிமை உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்காக நாம் இன்னமும் கடுமையாகப் போராட வேண்டிய சூழல்தான் உள்ளது. எனவே எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை நாம் தொடங்கக் கூடிய நாள்தான் இன்றைய (18/02/2026) நாள்" என்று ஒரு இலட்சிய உரையை சட்டமன்றத்தில் பதிவிட்டார் நம் தலைவர் முதல்வர் அவர்கள்.

The Hindu 17/02/26 ஆங்கில நாளிதழில் நடுப்பக்கத்தில் உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை வலியுறுத்தி அருமையான ஓர் கட்டுரையை நம் உயிர்நிகர் தலைவர் முதல்வர் ஸ்டாலின் தீட்டியுள்ளார், மொத்த கட்டுரையும் கூட்டாட்சித் தத்துவத்திற்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்திருக்கிறது, அதிலும் குறிப்பாக இந்த பின் வரும் வரிகள் ஒன்றியத்தில் அதிகாரக் குவிப்பின் ஆபத்தை உணர்த்துகிறது; "Centralisation once defended as a necessity, has hardened into habit"

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு விடுகிறோம், ஆனால் அதற்கான அவசியங்கள் அப்படியே உள்ளன என்று கூறியதை இங்கே நினைவு கூறுகிறது இக்கட்டுரை. மாநில சுயாட்சியை யும், கூட்டாட்சி தத்துவத்தையும் உள்ளடக்கிய அரசமைப்பு சட்டம் காலத்தின் தேவை என்பதை வலியுறுத்துகிறது முதல்வரின் சிறப்பான கட்டுரை.

பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் மரபுரிமை வாரிசான கழகத் தலைவர், முதல்வர் ஸ்டாலின் அவர்கள், கழகத்தின் மூலதாரக் கொள்கையான "மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி" என்ற முழக்கத்துக்கு வலு சேர்க்கும் வகையில் தனது சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளார். மாநில சுயாட்சி என்ற கனல் அணையாமல் காத்து நிற்கிறார் நம் உயிர்நிகர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் நாடி கொள்கையான மத்தியில் கூட்டாட்சி !! மாநிலத்தில் சுயாட்சி !! என்ற முழக்கத்தை மீண்டும் வலியுறுத்தியது முதல்வரின் சட்டமன்ற உரை.

பேரறிஞர் அண்ணாவின் காலத்தினை தொடர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொடர் வலியுறுத்தலையும் தொடர்ந்து, திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் கூட்டாட்சி தத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி வருகிறார்.

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்!!
வெல்க மாநில சுயாட்சிக் கொள்கை.

---

‘திராவிட மாடல்’ ஆட்சியில்

## இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

### சட்டப் பேரவையில் – அமைச்சர் கயல்விழி செல்வராஜ் – ஆதாரங்களுடன் விளக்கம்!

**சென்னை. பிப்.24- சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்று ஆதாரங்களுடன் குறிப்பிட்டார்.**

அவர் கூறியதாவது:

நம்முடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, TNPSC மற்றும் பல்வேறு தேர்வு முகமைகள் மூலமாக பணியாளர்கள் பணியமர்த்தப் பட்டுள்ளார்கள்.

TNPSCல் மட்டும் 45 ஆயிரத்து 126 நபர்களும், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 24 ஆயிரத்து 927 நபர்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக 12,894 நபர்கள், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் வாயிலாக 11,244 நபர்கள் என மொத்தம் 94 ஆயிரத்து 191 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், மேற்படி தெரிவு முகமைகள் தவிர்த்து, உள்ளாட்சி அமைப்புகள், அரசு துறை நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் நேரடி நியமனம் வாயிலாக 54 ஆயிரத்து 864 நபர்களுக்கும், அரசுப் பணியில் பணிபுரிந்து உயிர் நீத்த அரசு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் 5 ஆயிரத்து 899 நபர்களுக்கும் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்ட 178 நபர்களுக்கும் என மொத்தம் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 132 நபர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பணியில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



இதுமட்டுமல்லாமல், உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில் நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அரசு மேற்கொண்டு 12 இலட்சத்து 16 ஆயிரத்து 412 கோடி ரூபாய் மதிப்பிலான (மேசையைத் தட்டும் ஒலி) முதலீட்டை ஈர்த்துள்ளதன் மூலம் 36 இலட்சத்து 43 ஆயிரத்து 768 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை இவ்வரசு உருவாக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைமூலம் நடத்தப்பட்ட 2 ஆயிரத்து 474 வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 345 இளைஞர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2026 ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்ட அட்டவணை 13122025 அன்றே வெளியிடப்பட்டு தெரிவு நடவடிக்கைகள் காலதாமதமின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலளித்தார்.

---

தி.மு.க. மகளிர் அணி

### நாமக்கல் மேற்கு மாவட்ட சமூக வலைதளப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட வசந்தா அவர்கள் மறைவெய்தியதால், அவருக்கு பதிவாக திருமதி **எஸ். வசந்தா** (4/27ஏ2 கவலோந்தி மரத்தோட்டம் கலியனூர் அஞ்சல், குமாரபாளையம் வட்டம் நாமக்கல் மாவட்டம்

ஏற்கனவே நியமிக்கப்பட்ட பரிமளாதேவி அவருக்கு பதிலாக, திருமதி **எஸ்.மோகனா** (1/13, பிலிக்கல்பாளையம், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் 637213) ஆகியோர் நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **ஜெ. ஹெலன்டேவிட்சன்,** |
| சென்னை - 600018 | செயலாளர் |
| நாள்- 22.2.2026 | தி.மு.க. மகளிர் அணி |

---

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசரச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் – செஞ்சி கே,எஸ்,மஸ்தான் எம்,எல்,ஏ, அறிக்கை!



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (24.02.2026 – செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:–

1. 23.02.2026 இன்று முதல்வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை பிரச்சாரம் மேற்கொள்வது சம்பந்தமாக.
2. மார்ச் 1 ல், கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக.
3. மார்ச் 9 ஆம் தேதி திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு சம்பந்தமாக,
4. கழக ஆக்கப் பணிகள் சம்மந்தமாக.

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர் – விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---




சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ ‘ஸ்டாலின் தொடரட்டும்’. ‘தமிழ்நாடு வெல்லட்டும்’, ஸ்டாலின் மகளிர் படை என்ற தலைப்பில் சேலம் வடக்கு தெற்கு மேற்கு ஓமலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மகளிர் கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மற்றும் மாவட்ட பொருளாளர் மு.கார்த்திகேயன். தலைமைச் செயற்குழு சி. ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், தொகுதி பார்வையாளர்கள் பி. ஏ.ஆர். இளங்கோவன், டாக்டர். விவேக், ராஜசேகர், பொதுக் குழு உறுப்பினர்கள் பூபதி, சந்திரன், சா. சுப்பிரமணி, மாநகர நிர்வாகிகள் பா. ரகுபதி, முருகன். கணேசன், எம்.எம். ஷெரீப் உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## திருச்சி தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

*திருச்சி, பிப்.24-*

*திருச்சி தெற்கு மாவட்டத்தில் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் மாவட்டச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.*




*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை தொடர்ந்து, திருச்சி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.*

*கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வன்னை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா மாநில அணி நிர்வாகி செந்தில், பகுதி கழகச் செயலாளர். மோகன் மற்றும் , மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி மாவட்ட செயலர் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் என்னவென்றால் நாளைய தினம் துவங்கப்படவுள்ள "ஸ்டாலின் மகளிர் பிரச்சாரப் படை" மூலமாக நாம் ஒவ்வொருவரும் இல்லம் தோறும் நமது அரசு சாதனைகளை எடுத்து கூற ஏதுவாக சில வழிமுறைகளை தலைமைக் கழகம் வழங்கி உள்ளது அதன்படி பொது மக்களிடம் நாம் மிகுந்த பக்குவமாக எடுத்துக்கூறி அத்தனை பேரையும் நாம் நெறிமுறைகளோடு கையாள வேண்டும்.*

*இன்னும் தேர்தலுக்கு சில நாட்களே உள்ளதால் நமது பணி மிகத் தீவிரமாக அமைய வேண்டும் என இக்கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக்கொண்டார்.*